**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.119/2012**

தேதி . 25.11.2021

பெயர் . அன்னால்

க/பெ . கோவில் பிள்ளை

வயது . 40

வா.சா. 1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அ.வ. 55/2011ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண் தெரியுமாத என்றால் சர்வே எண்124, 12, 13, 14. அ.வ. 55/2011ல் சர்வே எண் 124/14 யை இரு ஐட்டமாக பிரித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. அந்த வழக்கில் கடந்த 30.4.1994ல் என் அம்மாவிற்கு கிரைய letter மூலம் சொத்து கிடைத்தது அந்த கிரைய letter இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது என் அத்தையின் சொத்து என் அப்பா அம்மா அனுபவித்து பயிர் செய்து வந்தாகள் அதனால் தான் என் அத்தை கிரைய letter எழுதி கொடுத்தார் இதை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.வ.55/2011ல் உள்ள வழக்கு சொத்தும் இந்த வழக்கு சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். வழக்கின் விஸ்திரணம் எவ்வளவு என்றால் 7 சென்ட். அ.வ.55/2011ல் மொத்த விஸ்திரணம் 9 சென்ட் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 124/14ல் மொத்த விஸ்திரணம் இருப்பதே 7.40 சென்ட் தான் என்றால் சரிதான். வழக்கு சொத்து என் முன்னோருக்கும் எனக்கும் வழக்கு சொத்து எவ்வளவு என்று தெரியாது அனுபவத்தில் இருந்தது இல்லை அதனால் தான் அ.வ.55/2011ன் 9 சென்ட் என்றும் இந்த வழக்கில் 7 சென்ட் என்று தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல ஏற்கனவே அ.வ.55/2011 தவறாக தாக்கல் செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து பிரதிவாதியின் பூர்வீக அதனால் தான் பிரதிவாதிகளின் பெயர் வருகிறது என்றால் இல்லை. பிரதிவாதிகள் கதிர்காடு

என்கிற சரிதிக்கா என்பவரின் வாரிசுகள் என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் தெரியும். அ.வ.55/2011ன் வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கவில்லை என்றால் சரிதான். அ.வ.55/2011ல் வழக்கு தாக்கல் செய்த போது வழக்கு சொத்தில் வீடு இருந்தது அந்த வீட்டை கொலுத்தி விட்டு இந்த வழக்கை காலி மனை சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல கொட்டாய் இருந்தது அது என் மாமனர் காலத்தில் இருந்தது. ஜெயராமன் வழக்கு சொத்தில் group house திட்டத்தின் கீழ் வீட்டு கட்ட மனு செய்து மனு அனுமதிக்கப்பட்டது ஆனால் நாங்கள் புகார் கொடுத்ததால் நிறுத்தப்பட்டது என்றால் இல்லை. அ.வ.55/2011 யை தவறாக தாக்கல் செய்ததால் அந்த வழக்கை Not press செய்து விட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் இந்த வழக்கில் இந்த வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் தான் அனுபவித்தில் இருக்கிறார் என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தேவையான நபர்கள் மாவட்ட ஆட்சியர் , வாட்டாட்சியர் சேர்க்காதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**